(5)

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029139

05/2018/Ac/CB

1. District மாவட்டம் : Coimbatore PS: காவல்நிலையம் V & AC Coimbatore Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 22.05.2018

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7 of PC Act.

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 10.04.18 Date to : நாள் வரை 21.05.2018

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.05.2018 Time நேரம் : 18.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.05.2018 Time நேரம் : 18.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed [Computer]

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் about 5 kms South West.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o. Joint Director of Agriculture, Thadagam Road, Coimbatore - 30.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் I. Ashok kumar, (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Iyer Gopal.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 38/2018 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -

(f) Occupation : தொழில் Real Estate [VK - Promoters] (g) Address : முகவரி D. No: 80, Sarvarimuthu Layout, Puliyakulam, Coimbatore - 45.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. Sukumar, Joint Director, O/o. Joint Director of Agriculture, Thadagam Road, Coimbatore - 13.

2) Tr. Murugan, Assistant, O/o. Joint Director of Agriculture, Thadagam Road, Coimbatore - 13.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 22/05/18

(signature) 22.5.18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

22.05.2018

Name: பெயர் C. Rajesh
Rank: நிலை DSP No. எண் .........
VGAC
Coimbatore.

மர்ப்பிக்கப்படுகிறது :

## Contents of FIR in Coimbatore V&AC Cr.No.5/2018/AC/CB U/s 7 of PC Act 1988.

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர், C.ராஜேஷ் ஆகிய நான் 16.05.2018 ஆம் தேதி மாலை 18.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த போது ஐ.அசோக்குமார், வயது 38, த/பெ. ஐயர் கோபால், கதவு எண் 80, சவுரிமுத்து லேஅவுட், புலியகுளம், கோவை-45. என்பவர் நிலையம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்த புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின் வருமாறு : 16.05.2018 கோவை அனுப்புனர், ஐ.அசோக்குமார், வயது 38, த/பெ. ஐயர் கோபால், 80. சவுரிமுத்து லேஅவுட், புலியகுளம், கோவை-641 045. பெறுநர், துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, கோவை. அய்யா, நான் கோயமுத்தூர் புலியகுளத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகி இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். நான் D.M.E படித்து விட்டு கடந்த 15 வருடங்களாக VL Promoters என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தை கதவு எண்.658 பி.என். பாளையம் ரோடு, புலியகுளம், கோயம்புத்தூர் என்ற விலாசத்தில் நடத்தி வருகிறேன். நான் பல வருடங்களாக கிராம பகுதிகளில் உள்ள விவசாயத்திற்கு தகுதியற்ற நிலத்தை வீட்டு மனைகளாகப் பிரித்து அதற்குரிய அனுமதியை உரிய அதிகாரிகளிடம் பெற்று பொதுமக்களுக்கு விற்று வருகிறேன். அவ்வாறாக கோயமுத்தூர் பாப்பம்பட்டி இடையர்பாளையம் பகுதியில் எனது பெயரில் உள்ள புல எண்.314/4B, 310/1, 310/2, 312/1B2, 312/3A, 312/4A, 312/4B1-ல் 9.87 ஏக்கர் கொண்ட விவசாயத்திற்கு தகுதியற்ற நிலத்தை வீட்டு மனைகளாக பிரிக்கும் பொருட்டு வேளாண்மை துறையிலிருந்து மேற்படி இடம் விவசாயத்திற்கு தகுதியற்ற நிலம் என்று தடையில்லா சான்று பெற

வேண்டி இருந்தது. எனவே , தடையில்லா சான்று வாங்குவதற்காக வேளாண்மை உதவி இயக்குநர், சுல்தான்பேட்டை, சூலூர் வட்டம், கோவை மாவட்டம் என்ற முகவரிக்கும், மற்றும் அதன் நகலை வேளாண்மை இணை இயக்குநர் அவர்கள், வேளாண்மை துறை அலுவலகம் கோவை அவர்களுக்கும் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பத்தினை 28.03.2018-ல் தபால் மூலம் அனுப்பி வைத்தேன். அதனை தொடர்ந்து 10.04.2018-ம் தேதி மேற்படி தடையில்லாச் சான்று வாங்குவதற்கு திரு.சுகுமார் வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மை துறை கோவை அவர்களை நேரில் அவர் அலுவலகம் சென்று சந்தித்து வீட்டு மனை பிரிப்பதற்கான விபரத்தினை கூறி தடையில்லாச் சான்று வழங்கும்படி கேட்டேன். அதற்கு அவர் 4-லட்சம் ரூபாய் பணம் கொடுங்க, வேலையை முடித்து கொடுத்து விடுகிறேன் என்று கூறினார். அதற்கு நான் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது ரியல் எஸ்டேட் பிசினஸ் ரொம்ப மோசமா போயிட்டு இருக்கு என்று சொன்னேன். அதற்கு அவர் நீங்கள் சுமார் 10 ஏக்கர் நிலத்தை வீட்டு மனைகளாக பிரித்து விற்று லாபம் சம்பாதிக்கபோறீங்க என்று கூறி தான் அதிகமாக பணம் கேட்கவில்லை, குறைவாகத்தான் கேட்டுள்ளதாக சொன்னார். நான் தொகை ரொம்ப அதிகமாக கேட்கிறீர்கள், குறைத்து கொள்ளுங்கள் என்று திரும்ப திரும்ப கேட்ட போது, அவர் தொகையை குறைத்து 2-லட்சம் ரூபாய் தொடுக்க சொல்லி இதற்கு மேல் குறைக்க முடியாது, தடையில்லா சான்று வேண்டுமென்றால் 2-லட்சம் ரூபாய் கொடுங்கள் என்று கண்டிப்பாக சொல்லி விட்டார். நான் யோசனை பண்ணி சொல்லுகிறேன் என்று கூறி விட்டு திரும்பி வந்து விட்டேன். பின்னர் மேற்படி வேலையை கவனித்துக் கொள்ளும்படி என்னுடைய அலுவலகத்தில் எனக்கு உதவியாக பணிபுரியும் சசிகுமார் என்பவரிடம் சொன்னேன். அவரும் வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு இரண்டு, மூன்று முறை சென்றுள்ளார். உதவி இயக்குநர் அவர்கள் தடையில்லா சான்று வழங்கலாம் என்று பரிந்துரை செய்துள்ளதாக அவர் தெரிந்து கொண்டு என்னிடம் சொன்னார். இன்று

16.05.2018 தேதி காலை 11.00 மணிக்கு சசிகுமார் அவர்கள் வேளாண்மை இணை இயக்குநர், கோவை அவர்களின் அலுவலகத்திற்கு சென்று திரு.சுகுமார் அவர்களை சந்தித்து, பாப்பம்பட்டி இடையர்பாளையம் பகுதியின் வீட்டு மனை பிரிக்க தடையில்லாச் சான்று நிலுவையில் இருந்து வருகிறது என்ற விபரத்தை கூறி அதனை வழங்கும்படி கேட்டுள்ளார். அதற்கு அவர் சசிகுமாரிடம் " உங்கள் முதலாளி அசோக்குமாரிடம் தடையில்லாச் சான்று வழங்க ஏற்கனவே கூறிய தொகையை வந்து கொடுத்து விட்டு தடையில்லா சான்றை பெற்றுக் கொள்ள சொல்லுங்கள்" என்று வலியுறுத்தியுள்ளார். மேலும் அவர் கேட்ட பணம் கொடுக்கவில்லை என்றால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்ணிற்குரிய இடம் விவசாயத்திற்கு உகந்த நிலம் என்றும், வீட்டு மனை பிரிப்பதற்கு உகந்தது அல்ல என்றும் பதில் எழுதி விண்ணப்பத்தை நிராகரித்து விடுவேன் என்றும் மிரட்டியுள்ளார். திரு.சுகுமார், வேளாண்மை இணை இயக்குநர், கோவை அவர்களுக்கு 2-லட்சம் ரூபாய் லஞ்சமாக கொடுத்து தடையில்லா சான்று பெற எனக்கு விருப்பமில்லை. தடையில்லா சான்று வழங்க லஞ்சமாக ரூ.2,00,000/- கேட்கும் வேளாண்மை இணை இயக்குநர் திரு.சுகுமார் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு sd/- (xxxx) 16.05.18 (ஐ.அசோக்குமார்). Sir, Received the complaint on 16.05.18 at 18.00 hrs. Sd/- (xxxx) 16.5.18 DSP/V&AC/Coimbatore. Sir, The complaint was sent to DVAC by mail seeking a Preliminary Enquiry. Sd/- (xxxx) 16.05.18 DSP/V&AC/Coimbatore. Sir, After receiving permission from the Director of Vigilance and Anti-Corruption in PE 140/2018/AGRI/CB dt. 17.05.2018, a preliminary enquiry was registered on 17.05.2018 at 12.30 hrs and a preliminary verification of the complaint was conducted. Sd/- (xxxx) 17.05.2018 DSP/V&AC/Coimbatore. Sir, During

verification, the conversation between the complainant Tr.I.Ashokkumar and the accused Tr.Sukumar on 21.05.2018 between 11.37 hrs and 11.48 hrs in the office of the Joint Director of Agriculture, Thadagam Road, Coimbatore was recorded in the voice recording device. The total length of the recording is between 11.30 hrs and 11.55 hrs. The said conversation was heard in the presence of the complainant and he identified the voices. Before meeting the accused Tr.Sukumar, the complainant spoke with Tr.Murugan, Assistant working in the said office and it revealed that Tr.Murugan wanted amount separately. Then the complainant met the accused Tr.Sukumar in his office room and during the said conversation between them, the accused was found asking the complainant to look after him also and told him that it feels bad if the amount is reduced too much. In the continued talk, when the complainant asked about the quantum of amount, the accused Tr.Sukumar asked the complainant himself to fix the amount. When the complainant informed the accused Tr.Sukumar that he had earlier requested to reduce the amount and the accused had fixed the amount as Rs 2 lakhs, the accused Tr.Sukumar agreed to that and again told the complainant to give the amount as per his wish. Finally when the complainant told that he will be able to give Rs 1.5 Lakhs, the accused Tr.Sukumar agreed to accept the same. On coming out of the room, the complainant informed to Tr.Murugan,

Assistant, that he had agreed to give Rs 1.5 lakh to the accused Tr.Sukumar. At that time Tr.Murugan was also found demanding Rs 15,000/- for him separately and when the complainant told that he can give Rs 10,000/-, Tr.Murugan agreed to accept it. The said conversation confirmed the demand of illegal gratification by Tr.Sukumar, Joint Director of Agriculuture as well as by Tr.Murugan, Assistant and thereby a prima facie offence was made out against them. After getting oral permission from the DVAC, a case in Coimbatore V&AC Cr.No 5/2018/AC/CB u/s 7 of PC Act 1988 was registered on 22.05.2018 at 08.30 hrs against Tr.Sukumar, Joint Director of Agriculture, Coimbatore and Tr.Murugan, Assistant and took up investigation. Sd/- (xxxx) 22.05.2018 DSP/V&AC/Coimbatore.

அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசல் ஆகியவற்றை தனி நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான நீதிமன்றம், கோவை அவர்கள் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

Sd/- 22.5.18
DSP/V&AC/Coimbatore.

Enclosed: One CD containing the conversation between the accused Tr. Sukumar, Joint Director of Agriculture, Coimbatore and the complainant as well as the conversation between Tr. Murugan, Assistant and the complainant, recorded on 21.5.18 between 11.30 hrs and 11.35 hrs along with the certificate u/s 65(B)(4)(c) of the Indian Evidence Act 1872.